**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.),
ஜெயங்கொண்டம்.

**2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19–ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.247/2019**
**CNR.NO.TNAL05-000362-2019**

விஜயரெங்கன், வயது 56,
த/பெ. சாமித்துரை,
கீழத்தெரு, ஆலத்திபள்ளம் கிராமம்,
குண்டவெளி மதுரா,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். – வாதி

//எதிர்//

1. நாராயணசாமி, வயது 80,
த/பெ. பெரியதம்பி,
கீழத்தெரு, ஆலத்திபள்ளம் கிராமம்,
குண்டவெளி மதுரா,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம்.
2. சார்பதிவாளர் அவர்கள்,
சார்பதிவாளர் அலுவலகம்,
மீன்சுருட்டி – பிரதிவாதிகள்

வழக்கு தாக்கல் நாள் : 12.09.2019, 18.09.2019
வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் : 07.06.2018
இடம் : குண்டவெளி (மே) கிராமம்,
உடையார்பாளையம் தாலுக்கா,

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும் அதிகார வரம்பிற்கும் தாவா சொத்துக்களின் மதிப்பு ரூ.69,000/–ம், இதில் வாதிக்குரிய பாதி சொத்தான ரூ.34,500/–ம் இதற்கு வாதியிடமிருந்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 37(1)–ன் ரூ.1035/– செலுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும் அதிகார வரம்பிற்கும் தாவா சொத்துக்களின் மதிப்பு ரூ.1000/–ம், இதற்கு வாதியிடமிருந்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 27(c)–ன் படி ரூ.75.50/– செலுத்தப்பட்டுள்ளது. (ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணமாக ரூ.1,111/– செலுத்தப்பட்டுள்ளது).

தாவா சொத்தில் வாதிக்குரிய பாதிபாகத்தை உரிமை விளம்புகை செய்து முதல் நிலை தீர்ப்பானை பிறப்பித்தும், அதனடிப்படையில் சமூகம் கோர்ட் வழக்கறிஞர் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்து தாவா சொத்தினை நல இளப்பம் சரிகட்டி இரண்டாக பிரித்து வாதிக்கு சுவாதீனம் வழங்க ஏதுவாக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், தாவா சொத்தினை வாதிக்கு பாகம்

பிரித்துக்கொடுக்காமல் 1ம் பிரதிவாதி வில்லங்க ஆதரவு ஏதும் ஏற்படுத்தினால், அதனை 2ம் பிரதிவாதி பதிவு செய்யாமலிருக்க வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தீர்ப்பு செய்தும், தாவா சொலவுத் தொகை வாதிக்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவும், இன்னும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுக்தமாக தோன்றும், இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமென்று உ.வி.மு.ச.கட்டளை VII விதி 1–ன் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு என் முன்பாக 18.07.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி திரு.R.பழனிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டு, வழக்குரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்பாணை**

1. வாதியின் வழக்கு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**செலவுத்தொகை**

**– இல்லை –**

**சொத்துவிபரம்**

அரியலூர் ரி.டி. மீன்சுருட்டி சப்.டி., உடையார்பாளையம் தாலுக்கா, குண்டவெளி (மே) கிராமத்தில் இருக்கும் அ.பு.சர்வே எண்.116/7F –0.47.5 ஏர்ஸில் 0.16 செண்ட் **நான்கெல்லை:–** கோதண்டராமன் இடத்திற்கு (கி), ராமச்சந்திரன், கலியமூர்த்தி இடத்திற்கு (மே), காசிராமலிங்கம், ரெங்கநாதன் இடத்திற்கு (தெ), ரோட்டிற்கு (வ).

இத்தீர்ப்பாணையானது 2023ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்படுகிறது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.),
ஜெயங்கொண்டம்.